பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 29 வியாழக்கிழமை 12.03.2020 கதிர் 127

இனி து ரகசியம் அல்ல!

நீதிமன்ற விசாரணையில் இருக்கும் ஒரு விடயம் குறித்துப் பொது வெளியில் விவாதிப்பது முறையற்றது என்பார்கள். அது எனக்கு நன்கு தெரியும்.

எனினும், சில விடயங்களை இந்தப் பொது நிலைப்பாட்டை மீறிக் கவனத்தில் பக்கம் 02

# வட மாகாண ஆளுநருக்கு எதிராக தேர்தல் ஆணையத்தில் முறைப்பாடு

## பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் தான்தோன்றித்தனமான இடமாற்றங்களாம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்த பின்னர், அந்த விதிமுறைகளுக்கு மாறாக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரை உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடியதாக, அதிரடியாக அப்பதவியிலிருந்து மாற்றி, அந்த இடதுக்குப் புதியவரை நியமித்து, வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த உத்தரவுக்கு எதிராகக் கொழும்பில் தேர்தல் ஆணையத்திடம் நேற்று வாய்மூலமான முறைப்பாடு செய்யப்பட்டது.

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலுக்கு அமைவாக இன்று காலை அது தொடர்பாக எழுத்துமூல முறைப்பாடு செய்யப்படவிருப்பதாகத் தெரிகின்றது. அந்த முறைப்பாடு கிடைத்ததும் தேர்தல் ஆணையம் இந்த விடயத்தில் விரைந்து உரிய பிரதிபலிப்பைக் காட்டும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. பக்கம் 03

## சாதாரண தரப் பரீட்சை முடிவு இந்த மாத இறுதியில் வரும்




கொழும்பு, மார்ச் 12

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொது தராதரப் பக்கம் 03

## நீக்கப்பட்டார் நளினி!



மட்டக்களப்பு, மார்ச் 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இருந்து மனித உரிமைச் செயற்பாட்டாளரான நளினி ரட்ணராஜா நீக்கப்பட்டுள்ளார். பக்கம் 03

## யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் மீது கொடூரச் சித்திரவதை!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் அவர் மீட்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில்தடுத்துவைக்கப்பட்டுக்கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மீட்கப்பட்டார். அவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், அரியாலை மாம்பழம் பக்கம் 03

## வன்னியில் பழைய முகங்களை களமிறக்கியுள்ள கூட்டமைப்பு

வவுனியா,மார்ச்12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர் பக்கம் 03

## ஆப்கானிஸ்தான் தூதருக்கு நேற்று யாழ். பல்கலையில் கிட்டிய அனுபவம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஆப்கானிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான பக்கம் 03

## 22 மாவட்டங்களிலும் சங்கரி அணி போட்டி



கொழும்பு, மார்ச் 12

நாடாளுமன்றத் தேர்தலில் 22 மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிட தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது. தமிழர் விடு பக்கம் 03

## வேட்புமனுவில் நேற்று மஹிந்த கையொப்பம்



கொழும்பு, மார்ச் 12

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ளார்.

தனது விஜேராம வீட்டில் வைத்து அவர் வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ளார். இந்த நிகழ்வில் பக்கம் 03

## சீன சுற்றுலாப் பயணிகளை தனிமைப்படுத்தாதமை ஏன்?

### அரசிடம் கேள்வி எழுப்புகிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 12

இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரானிலிருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றபோதும் சீனா பக்கம் 03

## 4 ஆயிரம் சீனர்கள் கண்காணிப்புக்குள்

கொழும்பு, மார்ச் 12

சீனாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த 4000 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் இல்லை என்பதை உறுதிப்படுத்த அவர்கள் பக்கம் 03

## ஆலோசனைகளை அரசு உதாசீனம் கொரோனா ஆபத்தில் இலங்கை!



### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 12

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை அரசு உரிய பக்கம் 03

## கோழி இறைச்சிக்கு விலை நிர்ணயிப்பு



கொழும்பு, மார்ச் 12

நாட்டில் கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை நிர்ணா பக்கம் 03

# கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல் பெரும்பாலும் இன்று இறுதியாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இன்று காலை திருகோணமலையில் உள்ள இரா.சம்பந்தனின் வீட்டில் நடைபெறுகிறது.

காலை 11 மணிக்குக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூடுகிறார்கள்.

வேட்பாளர் பட்டியலை இறுதிசெய்வது குறித்து இன்று கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை, கூட்டத்தில் சில கருத்துமுரண்பாடுகள் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வன்னி மாவட்ட வேட்பாளர்கள் தெரிவு கிட்டத்தட்ட முடிந்து விட்ட நிலையில், நேற்று முன்தினம் மாவை சேனாதிராசா மன்னார் சென்றிருந்தார். இந்துசமயப் பிரதிநிதிகளை மாவை சந்தித்தபோது, மன்னாரில் இந்து வேட்பாளர்களை இறக்குமாறு அவர்கள் வலியுறுத்தினர். வன்னியில் தமது வேட்பாளர் தெரிவு முடிந்து விட்டதாகவும், ரெலோவின் சார்பில் ஓர் இந்து வேட்பாளரை இறக்குமாறு கோரவுள்ளதாக மாவை தெரிவித்திருந்தார்.

எனினும், ரெலோ சார்பில் மூவர் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தெரிவிலும் சச்சரவு நீடிக்கிறது. இளைஞரணி தலைவர் கி.சேயோனும் களமிறங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவரை இளைஞரணி முழுமையாக ஆதரிக்கிறது. இளைஞரணியின் இன்னொரு பிரதிநிதியான சாணக்கியன் களமிறக்கப்பட்டுள்ளார். அவரை இளைஞரணி ஆதரிக்கவில்லை.

நேற்று மட்டக்களப்பிற்குச் சென்ற மாவை சேனாதிராசாவை சந்தித்த இளைஞரணி பிரமுகர்கள், சேயோனை களமிறக்கும்படி கேட்டுள்ளார். இளைஞரணி சார்பில் ஒருவரை தெரிவு செய்து முன்மொழியும்படி, மாவை குறிப்பிட்டுள்ளார். இதனடிப்படையில், கட்சியின் இளைஞரணியினரின் பெரும்பகுதியினர் சேயோனை ஆதரிக்கிறார்கள்.

இதேவேளை, மட்டக்களப்பில் பெண் வேட்பாளர் நளினி நீக்கப்பட்டுள்ளார். கட்சியிடம் வேட்புமனுக் கேட்டு விண்ணப்பம் செய்த இன்னொரு பெண் வேட்பாளரான சட்டத்தரணியும் பட்டிருப்பு தொகுதியை சேர்ந்தவர். சாணக்கியனும் பட்டிருப்பு தொகுதியை சேர்ந்தவர். ரெலோ சார்பிலும் பட்டிருப்பில் ஒரு வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார்.

இதனால் பெண் வேட்பாளராக சட்டத்தரணியை இறக்குவதிலும் சிக்கல் உள்ளது. மூவரும் ஒரே தொகுதியில் களமிறங்குவது புத்திசாலித்தனம் அல்லவென்பதால், அந்த பெண் வேட்பாளர் நீக்கப்படுவார். அல்லது, சாணக்கியன் நீக்கப்பட்டு கல்குடா தொகுதியில் சேயோன் களமிறக்கப்படுவதுடன், பெண் சட்டத்தரணி பட்டிருப்பில் களமிறக்கப்படலாமென தெரிகிறது.

# விடுதலை கோரும் நளினியின் மனு; நிராகரித்தது சென்னை நீதிமன்றம்

சென்னை,மார்ச்.12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் நளினி தன்னை விடுவிக்க கோரி தாக்கல் செய்த ஆள்கொண்டர்வு மனு சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, ஆயுள் கைதிகளாக உள்ள ஏழு பேரையும் விடுதலை செய்ய கடந்த 2018-ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் திகதி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, 2018 செப்டம்பர் 11-ஆம் திகதி ஆளுநருக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இந்த பரிந்துரை மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காத நிலையில், தீர்மானம் நிறைவேற்றிய மறுநாள் முதல் தன்னை சட்ட விரோதமாக சிறையில் அடைத்து வைத்திருப்பதால் தன்னை விடுதலை செய்யவேண்டும் என்று சிறையில் இருக்கும் எழுவரில் ஒருவரான நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளுக்கு பிறகு நளினி சட்டப்பூர்வக் காவலில் இருக்கிறாரா அல்லது சட்டவிரோத காவலில் இருக்கிறாரா என தெளிவுபடுத்த வேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

பின்னர், இந்த வழக்கில் பதிலளித்த தமிழக அரசு, 7 பேரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாலும், இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணை நடத்தியதாலும் இவர்களின் விடுதலை தொடர்பாக மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் இந்த விவகாரத்தில் தமிழக அரசு முடிவெடுக்க முடியாது என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கின் அனைத்து தரப்பு வாதங்களும் கடந்த 20-ஆம் திகதி முடிந்த நிலையில், அந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படும் என்று



தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று இந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்த மனு மீதான விசாரணையில் 7 பேர் விடுதலை தொடர்பான தீர்மானத்தில் முடிவெடுக்கும்படி ஆளுநரை கட்டாயப்படுத்த முடியாது என தமிழக அரசு கூறியிருந்த நிலையில் தற்பொழுது நளினியின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

# 16 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; அதிபருக்கு எதிராக முறைப்பாடு

வவுனியா, மார்ச் 12

வவுனியா - பாவறகுளம் பகுதியில், 16 வயதுச் சிறுமி பாடசாலை அதிபர் ஒருவரால், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

காக்கையன்குளத்தில் உள்ள பாடசாலையொன்றில் அதிபராக கடமையாற்றும் நபர், அதே கிராமத்தில் வசிக்கும் தாய் தந்தையை பிரிந்து வாழும் 16 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

அந்த நபர், சிறுமியை தனது வீட்டில் தங்க வைத்துள்ளார். இந்நிலையில் சிறுமி மீது அதிபரினால் பாலியல் ரீதியான துன்புறுத்தல் மேற்கொள்ளப்படுவதாக அயலவர்களினால் செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் சிறுவர் பாதுகாப்புப் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அதிகாரிகள் குழு அந்தக் கிராமத்துக்குச் சென்று சிறுமியுடன் கலந்துரையாடிதன் அடிப்படையில், சிறுமி 15 வயதில் இருந்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவினர், செட்டிகுளம் பொலிஸாரின் உதவியுடன் பொலிஸ் நிலையத்தில் சிறுமியை ஒப்படைத்துள்ளனர்.

இதன் பிரகாரம் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் தமது தரப்பு வாக்குமூலத்தைப் பொலிஸாருக்கு வழங்கியதையடுத்து, சிறுமியிடம் செட்டிகுளம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபரான அதிபரை பொலிஸார் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# ஆசிரியையின் தாலிக்கொடி செம்மணியில் அபகரிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில், மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த ஆசிரியையின், தாலிக்கொடி மற்றும் சங்கிலியை, பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறி கொள்ளையர்கள் அபகரித்துள்ளனர்.



திருநெல்வேலி பகுதியில் வசிக்கும் ஆசிரியை ஒருவர் நாவற்குழி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பித்து வருகின்றார். நேற்று முன் தினம் பாடசாலை முடித்து, திருநெல்வேலியில் உள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த வேளை, செம்மணிப் பகுதியில், பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு கொள்ளையர்கள் அவரை வழிமறித்து தாலிக்கொடி மற்றும் சங்கிலி என்பவற்றை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, நல்லூர் - செம்மணி வீதியில் மதியம் மற்றும் இரவு நேரங்களில் வீதியில் ஆள்நடமாட்டம் குறைவாகக் காணப்படும் வேளைகளில் வீதியில் பயணிப்போரிடம் அப்பகுதியில் நடமாடும் வழிப்பறிக் கொள்ளையர்கள் வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பலரும் பொலிஸாருக்கு அறிவித்த நிலையிலும், பொலிஸாரால் வழிப்பறி கொள்ளையர்களைக் கைது செய்ய முடியவில்லை என குற்றம் சாட்டப்படுகின்றது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து விவாதிப்பது - விமர்சிப்பது - தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

அந்த வகையில் ஒன்றுதான் இப்போது ஐ.தே.கட்சியின் ரவி கருணநாயக்காவுக்கு எதிரான வழக்கு விசாரணையாகும்.

பிணை முறி விற்பனை மோசடி தொடர்பாக நீதிமன்றத் திடம் அனுமதி பெற்று - கைது வாரண்ட் பெற்று - ரவி கருணநாயக்கா உட்பட பன்னிரண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி சட்டமா அதிபர் பணித்தமையின் பேரில் - அந்த வழிகாட்டுதல் பரிந்துரையின் அடிப்படையில் - கொழும்பு கோட்டை பிரதம நீதிவான் நீதிஹமன்றில் விண்ணப்பித்து கைது உத்தரவைப் பெற்றிருக்கின்றனர் பொலிஸார்.

இதில்தான் பல திருக்கூத்துக்கள் அடங்கியிருக்கின்றன என்கின்றன சட்டவட்டாரங்கள்.

கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நபர்களில் ரவி கருணாநாயக்க மற்றும் ஓரிருவரைத் தவிர மற்றெல்லாரும் - குறிப்பாக அர்ஜுன் அலோஸியஸ் போன்ற மற்றவர்கள் - இதே பிணை முறி மோசடி விவகாரத்தின் பெயரிலான குற்றச்சாட்டில் கைதாகி, நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர்கள். அதே பிணைமுறி மோடி என்ற பெயரில் புதிய வழக்கு இலக்கத்துடன் ஒரு கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதே தவிர, முன்னைய வழக்கிலிருந்து இது வேறுபட்ட விடயம், வேறுபட்ட குற்றச்சாட்டு என்ற எந்த விவகாரமும் இந்த வழக்கில் முன்வைக்கப்படவில்லை.

இந்தக் கைது உத்தரவைக் கொழும்பு கோட்டை நீதிவான் ரங்க திஸநாயக்கா கடந்த புதனன்று விடுத்திருந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இதே போன்ற பிணைமுறி வழக்கு, இதே நீதிவான் முன்னிலையில் முன்னர் ஒரு தடவை வந்த போது, நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்து விட்டு அந்த வழக்கிலிருந்து ஒதுங்கிக் கொண்டவர் நீதிவான் ரங்க திஸநாயக்கா. தமது துணைவியார் மத்திய வங்கியில் பணியாற்றுகின்றமையால் இந்த விவகாரத்தைத் தாம் கையாள்வது பொருத்தமற்றது என்று குறிப்பிட்டு முந்திய பிணை முறி வழக்கு விடயங்களில் இருந்து தாமாக ஒதுங்கிக் கொண்டவர் அவர். இப்போது அதே மத்திய வங்கியுடன் தொடர்புடைய - அதே போன்ற பிணைமுறி மோசடி வழக்கில் - சந்தேக நபர்களுக்கு எதிராகக் கைது உத்தரவு அவரிடமிருந்தே பெறப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே பிணைமுறி மோசடி வழக்கு ஒன்று இருக்கின்றது. அந்த வழக்கு இலக்கத்தை மறைத்து விட்டு, அதே விவகாரத்துக்காக இன்னொரு விசாரணை, கைது, விளக்கமறியல் என்று சட்டத்தைப் பிழையாகக் கையாள்கின்றது சட்டமா அதிபர் திணைக்களமும் பொலீஸும் என்று நேற்று வாதிட்டனர் ரவி கருணநாயக்கா மற்றும் அர்ஜுன் அலோஸியஸ் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள்.

மேற்படி இருவர் உட்பட பன்னிரண்டு பேரைக் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் வழங்கிய உத்தரவை ரத்துச் செய்தல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து ரவி கருணாநாயக்கா, அர்ஜுன் அலோஸியஸ் உட்பட நால்வர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள், மூன்று நீதியரசர்களைக் கொண்ட கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 'ட்ரயர் அட் பார்' மன்றில் நேற்று விசாரிக்கப்பட்ட போதே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

ஒரே விடயத்துக்காக - வெறுமனே வழக்கு இலக்கத்தை மாறிப் பதிந்து விட்டு - இரண்டு தடவைகள் கைது செய்யப்படுவது, இரண்டு தரம் விசாரிக்கப்படுவது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்கினைத் தொடுப்பது போன்றவை சட்டத்தில் கேவலமானவையாகும்.

நீதிமன்றம் நியாயமாக நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம்.

ரவி கருணாநாயக்காவுக்கு நீதி கிடைக்காவிட்டாலும், ஏற்கனவே இதே பிணைமுறி விற்பனை மோசடி விவகாரம் தொடர்பாக நீண்டகாலம் விளக்க மறியலில் இருந்து வெளியே வந்திருக்கும் அர்ஜுன் அலோஸியஸ் போன்றோருக்கு நீதி கிட்டும் என எதிர்பார்ப்போம்...!

- மின்னல் -

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கே. தெய்வேந்திரன் அந்தப் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

நேற்றுப் புதன்கிழமை நடைமுறைக்கு வரும்வகையில்வடக்கு மாகாண ஆளுநர்திருமதி பீ.எஸ். எம்.சார்ள்ஸ் இந்த பதவிநீக்க உத்தரவை வழங்கினார்..

வடக்கு மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் பதில் செயலாளராக கே.தெய்வேந்திரன் கடந்த சில மாதங்களாகப் பணியாற்றி வந்தார். கடந்த 4ஆம் திகதி தொடக்கம் அந்தப் பதவியில் அவரை நிரந்தரமாக நியமித்து ஆளுநரால் கடிதம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 4ஆம் திகதிய நியமனக் கடிதத்தை நேற்று 11 ஆம் திகதி நடைமுறைக்கு வரும்வகையில் மீளப் பெறுவதாக ஆளுநரால் நேற்று கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், அவரது வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பதவிக்குரிய நியமனக் கடிதத்துடன் செந்தில்நந்தனன் நேற்று சுகாதார அமைச்சில் பிரசன்னமானார்.

நேற்று கொழும்பில் தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குச் சென்றிருந்த வடக்கு மாகாணத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராஜா இவ்விடயம் குறித்து அறிந்ததும் அதற்குப்பொறுப்பானதுணை ஆணையாளர் ஒருவரைச் சந்தித்து நேரில் முறைப்பாடு செய்தார் என அறிய வந்தது.

பின்வரும் விடயங்களை அவர் தேர்தல் திணைக்களத்துக்குச் சுட்டிக்காட்டினார்:-

பொதுத் தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்த பின்னர் –

★ வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பதவியில் கே.தெய்வேந்திரன் மார்ச் 04 ஆம் திகதி நிரந்தர மாக்கப்பட்டமை தவறு.

★ அந்தப் பதவியிலிருந்து அவரை நீக்கி, கொழும்புக்கு பதவி மாற்றம் செய்தமை தவறு.

★ அவரது இடத்துக்கு கொழும்பில் இருந்து செந்தில்நந்தனை புதிதாகக் கொண்டு வந்து வடக்கு மாகாண சபையில் நியமனம் செய்தமை முற்றிலும் தவறு.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் தேர்தல் ஆணையகத்தின் பிரதிபலிப்பு இன்று உடனடியாக வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 05 ஆம் பக்கத்தில்)

## கோழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யித்துள்ளது.

அதன்படி கோழி இறைச்சி ஒரு கிலோ கிராமின் அதிகபட்ச சில்லறை விலை 430 ரூபாயாகவும் தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி ஒரு கிலோ கிராமின் அதிகபட்ச விலை 530 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டு விலை மாற்றம் நேற்றுப் புதன்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தியைச் சேர்ந்த விக்டர் சுந்தர் (வயது - 36) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடுப் பகுதியில் கெமி குரூப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டநிலையில் வீதியில் அடிகாயங்களுங்களுடன் கடந்த டிசெம்பர் 4ஆம் திகதி மீட்கப்பட்டார். அந்த வழக்கில் விக்டர் சுந்தர் பொலிஸாரால் தேடப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முற்பகல் 11 மணியளவில் சிகை அலங்கரிப்பு நிலையத்திலிருந்தவேளை, யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஹர்ரா என்பவரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மனைவி வேலைக்குச் சென்று வீடு திரும்பியபோது வீடு பூட்டப்பட்டதை அறிந்து தேடிய நிலையிலேயே கணவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது. பொலிஸ் நிலையத்துக்கு அவர் சென்ற போதும்கணவரைப்பார்க்கப்பொலிஸார் அனுமதிக்கவில்லை.

அதனால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சந்தேக நபரின் மனைவி முறைப்பாட்டை வழங்கியுள்ளார். அதுதொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் கனகராஜ் துரிதமாகச் செயற்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்துக்குள் சென்றுள்ளார்.

அங்கு சந்தேக நபர் கடுமையாகத் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் காணப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்று மாலை 6 மணியளவில் சந்தேக நபர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்குத் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் கெமி குரூப்பின் சகோதரர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் கணவருக்குத் தொடர்பில்லை. அன்றைய தினம் அவர் வேலைக்குச் சென்றிருந்தார். அத்துடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கிலும் எனது கணவர் சந்தேக நபராகச் சேர்க்கப்படவில்லை.

என் கண் முன்னேயே கணவரைப் பொலிஸார் கடுமையாகத் தாக்கினார்கள். எனது வீட்டுத் திறப்பு கணவரின் பொக்கற்றுக்குள் இருந்தபோதும் அதனைத் தர பொலிஸார் மறுத்தனர் என்று பொலிஸாரால் தாக்கப்பட்ட விக்டர் சுந்தரின் மனைவி தெரிவித்தார்.

பொலிஸ் நிலையத்துக்கு நாம் சென்று சந்தேக நபரைப் பார்த்த போது, அவர் மயக்கநிலையிலிருந்தார். அவரை மீட்டெடுக்க பொலிஸாருடன் கடுமையாகப் போராடினோம். சந்தேக நபரை அழைத்துச் செல்ல மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எந்த அதிகாரம் இல்லை என்று குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி கடுமையாக எதிர்த்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளமையால் பொலிஸாரின் சித்திரவதை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார். (ஐ-07)

## ஆலோசனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் பின்பற்றவில்லை என்றும், இதன் காரணமாகவே நாட்டு மக்கள் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரமதாஸ குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸின் தாக்கம் உலகளாவிய ரீதியில் பாரிய சுகாதார நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. இந்நிலையில், கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியிருந்தேன். ஆயினும் அரசு அதனை கேலிக்குரிய விடயமாகவே எடுத்துக் கொண்டது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வகையிலான ஜனாதிபதி செயலணியை உடனடியாக அமைத்து இந்தச் சுகாதார நெருக்கடியை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## சீன சுற்றுலாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் ஏன் தனிமைப்படுத்தப்படுவதில்லை என ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில் –

சீனப் பிரஜைகள் சுதந்திரமாக இருப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் பாங்கொக் மற்றும் ஹொங்கொங் ஊடாக வந்த விமானம் மூலம் சுமார் 60 சீனப் பிரஜைகள் வருகை தந்துள்ளனர். எனினும், அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை. சுகாதார அமைச்சினால் விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரான் முதலான நாடுகளிலிருந்து வரும் பயணிகளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த வைரஸ் தொற்று உருவாகிய சீனாவிலிருந்து வருபவர்கள் குறித்த குறிப்பிடப்படவில்லை. அவர்கள் சுதந்திரமாக உள்ளனர் – என்றார். (ஐ)

## 22 மாவட்டங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைக் கூட்டணியின் தலைவர் த.இராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின்போதே இந்த முடிவு எட்டப்பட்டதாக கட்சி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யுத்தம் முடிந்து 10 வருட காலமாகியும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேறாத வகையில் இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம். இதுவரை காலமும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டவர்களே இதற்கான பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

அவர்கள் செய்யத் தவறிய மற்றும் பேரம் பேசும் வல்லமை இருந்தும் அதைப் பயன்படுத்தாமல் தங்களின் சுயநலத்தால் செயற்படுத்த முடியாமல்போன அனைத்து விடயங்களுக்கும் நாம் முன்னுரிமை கொடுத்து, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றப் பாடுபட வேண்டும்என்றகருத்து அனைத்து உறுப்பினர்களாலும் வலியுறுத்தப்பட்டது.

ஆக்கபூர்வமான முறையில் ஆரோக்கியமான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு, காரசாரமான விவாதங்களும் நடைபெற்றன. வேட்பாளர்களின் பட்டியல் மிக விரைவில் வெளியிடப்படும் என கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கூறினார் – என்றுள்ளது. (ஐ)

## நீக்கப்பட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலதரப்புகளிலும் இருந்து எழுந்த கடும் விமர்சனங்களையடுத்து இந்த முடிவை தமிழரசுக் கட்சி தலைமை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

இதேவேளை, நளினிக்குப் பதிலாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் சேர்க்கப்படுவாரெனத் தெரியவருகின்றது. (ஐ)

## ஆப்கானிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் எச்.ஈ.மொஹமட் அஸ்ரப் ஹதரி பல இடங்கிற்கும் சென்று பல தரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். எனினும் யாழ். பல்கலைக்கழகத்தில் அவருக்குக் கசப்பான அனுபவம் கிட்டியதாகக் கூறப்படுகிறது.

யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட்டை மாநகர முதல்வரின் அலுவலகத்தில் அவர் சந்தித்து சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து யாழில் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள், மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்பன தொடர் பிலும் அவர் ஆராய்ந்திருந்தார்.

இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று பல தரப்பினர்களையும் சந்தித்து சமகால நிலைமைகள் தொடர்பில்ஆராய்ந்தஆப்கானிஸ்தான் தூதுவருக்கு யாழ் பல்கலைக்கழகம் சென்ற போது மிகவும் மனவருத்தம் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

தூதுவரின் விஜயம் தொடர்பில் ஏற்கனவே யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டு சந்திப்பிற்கான நேரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே நேரத்தில் இந்த விஜயம் தொடர்பிலும் சந்திக்கப் போவது தொடர்பிலும் மீண்டும் மீண்டும் தூதரகத்தால் பல்கலைக்கழகத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டும் இருக்கின்றது.

இதனடிப்படையில் சந்திப்பிற்காக யாழ் பல்கலைக்கழகம் சென்றபோது அங்கு அவரை வரவேற்பதற்கோ அல்லது அவரை அழைத்துச் செல்வதற்கோ அல்லது சந்தித்துக் கலந்துரையாடுவதற்கோ எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லையாம். இதனால் தூதுவர் மிக மன வேதனை அடைந்தார் எனவும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருந்ததாகவும் அறிய வருகிறது.

எனினும் கால தாமதத்தின் பின்னர் தூதுவர் அழைக்கப்பட்டு சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

## வேட்புமனுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

## சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையின் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்பட இருப்பதாகப் பரீட்சைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் எஸ். பிரணவதாஸன் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெற்றது. இப்பரீட்சையில் ஏழு லட்சத்து 17 ஆயிரத்து எட்டு பேர் தோற்றினர். (ஐ)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தை உள்ளடக்கிய வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் இலங்கை தமிழரசு கட்சியில் சார்ல்ஸ் நிர்மலநாதன், சிவப்பிரகாசம் சிவமோகன், சாந்தி ஸ்ரீகந்தராசா, பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோரும், தமிழீழ விடுதலை இயக்கத்தில் (ரெலோவில்) செல்வம் அடைக்கலநாதன், வினோ நோதராதலிங்கம், செந்தில்நாதன் மயூரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) சார்பில் கந்தர் தாமோதரம் பிள்ளை லிங்கநாதன், கந்தையா சிவலிங்கம் ஆகியோர் போட்டியிடுவர் என அறியமுடிகிறது.

ரெலோவில் போட்டியிடும் மூன்றாவது வேட்பாளர் இதுவரை தேர்வுசெய்யபடாத நிலையில் முன்னாள் வடக்குமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரனை வேட்பாளராக நியமிக்க கட்சியின் தலைமை குழு தீர்மானித்துள்ளதுடன் அதனை மயூரன் ஏற்றுகொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 4 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க, இலங்கையில் சுமார் 4443 சீனர் சுகாதார அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

சீனாவின்தற்போதுநிலைமை ஒரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. தினசரி சுமார் 40 பேரே கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுகின்றார்கள்.

அவ்வாறு சீனாவில் அந்த எண்ணிக்கையில் கூட ஒரு வீழ்ச்சியை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இப்போது வைரஸால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடு இத்தாலியே – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேசியத் தேர்தல் திருவிழாவை குழப்புமா கொரனோ வைரஸ்?

உலகம் முழுவதும் நூறுக்கும் அதிகமான நாடுகளில் பரவி, இதுவரை நாலாயிரத்துக்கும் அதிகமானோரின் உயிர்களைக் காவு கொண்டு, ஒரு லட்சத்துக்கும் கூடிய எண்ணிக்கையுடையோரைப் பீடித்துத் தனது காலை பூமிப்பந்தில் அகலப் பதித்து, ஆழ வேரூன்றிப் பரவி வருகின்றது கொரனோ வைரஸ்.

இதன் பூர்விகப் பிறப்பிடமான சீனாவின் ஹூபே மாகாணத்தின் வுகானில் இந்த வைரஸின் பரவல் வீச்சம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் –

கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் இது முதல் வெற்றி என சீனாவின் அதிபர் ஷிங் ஜின் பிங் பிர கடனப்படுத்தினாலும் கூட –

கொரோனாவின் அகோரப் பிடியிலிருந்து பூவுலகம் தப்புவதற்கான மார்க்கம் ஏதும் இதுவரைக் கிட்டவில்லை என்பது தான் உண்மை.

நேற்று சீனாவிலும், இன்று மேற்குலகிலும், இந்தியாவிலும் காலூன்றி நிற்கும் கொரனோ வைரஸ் தனது ஆதிக்கப் பிடியை நாளை நமது இலங்கை பக்கம் திருப்பாது என்று நம்புவதற்கோ – ஆறதலடைவதற்கோ – எந்த முகாந் திரமும் இல்லை.

இலங்கையர் ஒரிருவரைத் பீடித்த நிலையில் அது அடங்கி விடும் என நம்புவதற்கும் எந்த வாய்ப்பும் கிடையாது என்பதும் உண்மை.

அது இலங்கையில் தன் கைவரிசையைக் காட்டப் போகும் நாள் நாளையா, நாளை மறுதினமா, அல்லது அதற்கு அடுத்த நாளா என்ற கேள்விதான் சந்தேகத்தோடு தொடர் கின்றதே தவிர, அதன் கைவரிசை நம் பக்கத்தில் இல்லை என்று திருப்தியடைவதற்கு எந்த வலிதான காரணமும் நம் மத்தியில் இல்லை.

எப்படி கொரனோ வைரஸை இலங்கைத் தீவு எதிர்கொள்ளப் போகின்றது? அதற்கான ஆயத்த நிலையில் நாம் இருக்கின்றோமா? – இவை எல்லாம் நம்மை மலைக்க வைக்கும் கேள்விகள்.

அதுவும் முழு நாடுமே ஒரு தேர்தல் திருவிழாவுக்குத் தயாராகி வருகையில் இந்த கொரனோ வைரஸை பீதி, குலை நடுங்க வைக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின் றது.

தேர்தல் திருவிழாவின் முதல் அம்சமான வேட்புமனுத்தாக்கல் இன்று தொடங்குகின்றது. 19ஆம் திகதி வரை ஒரு வாரம் அதற்குக் கால அவகாசம் உண்டு.

வேட்புமனுத் தாக்கலுடன் இலங்கையில் தனது பிரசன்னத்தையும் பதிவு செய்து தாக்கல் செய்துள்ளது கொரனோ வைரஸ். இந்தத் தாக்கல் எதுவரைத் தாக்குத லாகத் தொடரப் போகின்றதோ என்பதுதான் இப்போதைய அம்சமாகும்.

பொதுத் தேர்தல் பிரசாரமும், கூட்டங்களும் களை கட்டும் சமயத்தில் கொரனோ இலங்கையில் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தால் என்ன வழி என்பதுதான் மலைக்க வைக்கும் – அச்சமூட்டும் – கேள்வியாகும்.

கொரனோ வைரஸின் தாக்கம் நாளுக்கு நான் அதிகரித்து வருவதால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை அதன் கொரூரப் பிடிக்கு மத்தியில் – அதனால் ஏற்படக் கூடிய வாழ்வியல் நெருக்கடிகளுக்கு இடையில் – குறிப்பிட்ட திகதியில் திட்டமிட்டபடி நடத்தி முடிக்கலாமா என்பது குறித்து இலங்கையின் சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு சுகாதார அமைச்சுடன் பேச்சு நடத்தியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தல் பிரசாரங்கள், வாக்களித்தல் போன்றவற்றுக்காக ஒன்றுகூடும் பொதுமக்கள் ஆகியோரின் சுகாதாரப் பாது காப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், காத்திரமான – தீர்க்க மான – சம யோசிதமான – முடிவுகளை எடுக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வருகின்றது எனவும் கூறப்படுகின்றது.

எனினும், இவ்விடயத்தை ஒட்டி சுகாதார அமைச்சுடன் தேர்தல்கள் ஆணையம் இவ்வாரத்தில் இன்னொரு சுற்றுப் பேச்சு நடத்தவிருப்பதாகவும் தெரிகின்றது.

பொதுத் தேர்தலுக்குரிய காலத்தில் கொரனோ தலை விரித்தாடுமானால், அது சுதந்திரமான, சுயாதீனமான வாக்களிப்புக்கும் மக்கள் தீர்ப்புக்கும் பங்கத்தை – பெரும் பாதிப்பை – ஏற்படுத்தி விட வாய்ப்புண்டு.

அப்படி ஒரு நெருக்கடியான நிலைமை உருவானால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு எடுக்கப்படக் கூடிய வாய்ப்பான வழிவகைகள், மார்க்கங்கள், குறித்து நேரத்துடனே சிந்திக்க வேண்டிய ஒரு தேவை – சூழ்நிலை – எழுந்துள்ளது.

ஏழு, எட்டு ஆண்டுகள் முற்கூட்டிய திட்டமிடல்கள், தயாரிப்புகள், ஆரவார ஏற்பாடுகளோடு, நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நிதிச் செலவுடன் ஒழுங்குபடுத்தப்பட்டு வரும் இந்த ஆண்டுக்கான ஒலிம்பிக் வரும் ஒகஸ்டில் ஜப்பானில் நடைபெறவிருக்கின்றது. அதற்கே கொரனோ நிரந்த ஆப்பு வைத்துவிடும் என்று சந்தேகிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

கொரனோ நெருக்கடியைத் தாண்டி தேசிய தேர்தல் திருவிழாவை நமது இலங்கை நாடு எப்படி ஒப்பேற்றப் போகின்றது? முழு நாட்டையும் இப்போது அச்சுறுத்தும் கேள்வி இதுதான்.

# பகிரங்க விவாதத்துக்கு விக்கி, சுமந்திரன் தயாரா?

## சவால் விடுகின்றது முன்னணி

யாழ்ப்பாணம்,மார்ச்12

எதிர்வரும் நடாளுமன்றத் தேர்தலில் வடக்கு – கிழக்கில் போட்டியிடவுள்ள மூன்று பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளும் பகிரங்க விவாதத்தை மேற்கொள்ளவேண்டுமென விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய இரண்டு கட்சிகளுக்கும் சவால் விடுத்துள்ளது.

பகிரங்க விவாதத்தை மேற்கொள்ள முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தயார் எனத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணண், அந்த விவாதத்திற்குச் சுமந்திரன் மற்றும் விக்கினேஸ்வரன் தயாரா என்றும் கேட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் க.வீ.விக்கினேஸ்வரன் ஆகிய மூன்று தலைவர்களும் பகிரங்க விவாதத்திற்கு வர வேண்டுமென யாழ் பல்கலைக்கழகச் சட்டத்துறை தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பு சமூக வலைத்தளங்கள் வெளியாகியிருந்த நிலையில், அந்த அழைப்பை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொண்டு பகிரங்க விவாதத்திற்குத் தாம் தயார் என அறிவித்துள்ளதுடன் ஏனையவர்களும் அவ்வாறு விவாதத்தை மேற்கொள்ளத் தயாரா என்றும் கேட்டுள்ளது.

இது குறித்து முன்னணியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணண் தெரிவிக்கையில் –

தேர்தலொன்று நடைபெறவிருக்கின்ற நிலையில் மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பகிரங்க விவாதத்தை மேற்கொள்ள வேண்டுமென யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவரிடமிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பகிரங்க விவாதத்தை மேற்கொள்வதற்கான அவசியம் குறித்தும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

ஆகையினால் அத்தகைய விவாதத்திற்கு எமது கட்சி தயாராகவுள்ளது. அதே போல ஏனைய இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் தயார் என்றால் பகிரங்க விவாதத்தை மேற்கொள்ள முடியும். அதனூடாக மக்களும் பல விடயங்களைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆகையினால் பகிரங்க விவாதத்தை மேற்கொள்ள வேண்டியது பயனுள்ளதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

எனவே ஒவ்வொரு கட்சியில் இருந்தும் இரண்டு பேர் கலந்து கொள்ளக் கூடிய வகையில் அழைப்பு விடுக்கப்பட்ட கட்சிகள் விவாதத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும். மக்களுக்கு எப்போதும் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்படுகின்ற எமது கட்சியானது எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அதனடிப்படையில் பகிரங்க விவாதத்திற்கு நாம் தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்ற அதே வேளையில் ஏனைய இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் அதற்குத் தயாரா என்பதையும் கேட்கின்றோம். ஆகவே விடுக்கப்பட்ட பகிரங்க விவாதத்திற்கான அழைப்பை ஏனைய இரு கட்சிகளின் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டு பகிரங்க விவாததற்திற்கு முன்வரும் போது எமது கட்சியும் அந்த விவாதத்தில் பங்கெடுக்கத் தயார் – என்றார். (ஐ)

# தமிழரசுப் பிரசாரக் கூட்டத்தில் கட்சித் தலைவரை விமர்சிப்பதா?

## சீறுகின்றார் சி.வீ.கே.சிவஞானம்

– எஸ்.நிதர்ஷன் –


தமிழரசுக் கட்சி நடத்துகின்ற கூட்டங்களிலேயே தமிழரசுக் கட்சித் தலைவரை விமர்சிப்பது பொருத்தமல்ல. அவ்வாறு கட்சித் தலைவரை விமர்சிப்பது கண்டிக்கத்தக்கது.

– இவ்வாறு அக்கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ. வீ.கே.சிவஞானம் கட்சித் தலைவரை விமர்சிப்பதற்கு கண்டனமும் வெளியிட்டுள்ளார்.

யாழ் கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பொன்றை சிவஞானம் நடாத்தியிருந்தார்.

அச்சந்திப்பின் போது யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் 'தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம்' எனும் தலைப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை மூத்த ஊடகவியலாளர் என். வித்தியாதரன் விமர்சித்தார் என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –



இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்ந்த ஒரு கூட்டத்தில் அந்தத் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசவை விமர்சிப்பது பொருத்தமானதொன்றல்ல. மாவைனோதிராசா தான் அந்தக் கட்சியின் தலைவராக இன்றைக்கும் இருக்கின்றார். ஆகவே அவரை விமர்சிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

அவ்வாறு எங்களுடைய கட்சிக் கூட்டத்திலேயே எங்களது கட்சித் தலைவரை விமர்சிப்பது கண்டிக்கத்தக்கது. அவ்வாறாக விமரசிக்கும் செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். அதே போல எமது கட்சிக் கூட்டங்களில் எமது கட்சித் தலைவரையே விமர்சிப்பதான கூட்டங்களும் தேவையற்றவை. இந்த விடயம் தொடர்பில் கட்சிக்குள் நான் பேசுவேன். – என்றார்.

# கொரோனா நோயாளியின் குடும்பம் வீட்டுக் காவலில்

கொரோனா வைரஸ் (Covid - 19) தொற்றால் பாதிக்கப்பட்ட முதல் இலங்கைக் குடிமகனின் குடும்பத்தினர் வீட்டுக் காவலில் கண்காணிக்கப்படுகின்றன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாவைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர் நேற்று முன்தினம் பிற்பகல் அடையாளம் காணப்பட்டார் என சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்ஹ குறிப்பிட்டுள்ளார்.

52 வயதையுடைய அவர் சுற்றுலா வழிகாட்டியாக செயற்பட்டுள்ளார். இத்தாலி நாட்டு சுற்றுலாக்குழுவுடன் அவர் வழியாட்டியாக இணைந்து செயற்பட்டுள்ளமையுடன் தற்போது நோயாளி, நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு அவசியமான சிகிச்சைகளை ஆரம்பித்துள்ளோம்.

அத்துடன், அவரது குடும்பத்தினர் அவர்களது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக் கப்படுகின்றனர் என்றும் மருத்துவர் அனில் ஜாசிங்ஹ மேலும் குறிப்பிட்டார். (ஐ)

(மற்றுமொரு செய்தி 12 ஆம் பக்கத்தில்)

**நாளை 13.03.2020 – வியாழக்கிழமை**

நட்சத்திரம்: சுவாதி மு.இ 7.40 வரை
திதி : சதுர்த்தி பி.ப 2.48 வரை

இராகுகாலம் : 1.52 – 3.22
சுப நேரம் : 7.52 – 9.22

# மலையக பிரதிநிதி வடக்கில் வேண்டும்

## மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மலையகப் பிரதிநிதிகளும் வேட்பாளர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் நாங்கள் போட்டியிடுகின்றோம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான என்னுடன் சேர்ந்து இன்னொருவரும் போட்டியிடுவார்.

நிச்சயமாக என்னுடன் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஒருவரைத்தான் போட்டியிட வைப்பேன். இது சம்பிரதாயம்.

அதே மாதிரியானவொரு சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலே கடைப்பிடிக்கவில்லை என்பது பெரிய குறைபாடாக இருக்கின்றது.

இந்த முறை தயவு செய்து வன்னி மாவட்டத்தில் உங்களது பட்டியலில் தெற்கில் இருந்து சென்று குடியேறிய மலையக உரிமையைக் கொண்ட ஒருவரைத் தேடிப்பிடித்து அவரை உங்கள் வேட்பாளர் பட்டியலில் நிச்சயமாக நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நண்பர் எம்.ஏ.சுமந்திரனிடம் நான் சொன்னேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்று நான் நினைக்கின்றேன். பொறுத்திருந்து பார்ப்போம்.



வடக்கு, கிழக்கிலே குறிப்பாக வடக்கிலே வன்னிப் பிராந்தியத்தில் மலையகத் தமிழர்களை மாற்றானாக பூர்வீக மக்கள் கருதுகின்றார்களா என்ற சந்தேகம் மனங்களில் பாரியளவில் உருவாகியிருப்பதை நான் அப்பட்டமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேன் – என்றார். (ஐ)

## கொரோனா பரவுவதை தடுக்க ஒத்துழைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12

கொரோனா வைரஸ் எனும் கொவிட் – 19 இலங்கையில் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அதனை தடுப்பதற்காக ஆரம்பித்துள்ள நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரசு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இதுவரை உலகம் முழுவதும் பல நாடுகளில் வைரஸ் பரவியுள்ளது. அதனை தடுப்பதற்கு அந்நாடுகள் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இந்த நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர் நேற்று முன் தினம் பிற்பகல் அடையாளம் காணப்பட்டார் எனச் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்ஹ குறிப்பிட்டுள்ளார்.

52 வயதையுடைய அவர் சுற்றுலா வழிகாட்டியாக செயற்பட்டுள்ளார். இத்தாலி நாட்டு சுற்றுலாக்குழுவுடன் அவர் வழியாட்டியாக இணைந்து செயற்பட்டுள்ளதுடன் தற்போது நோயாளி நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு அவசியமான சிகிச்சைகளை ஆரம்பித்துள்ளதாகவும் மருத்துவர் அனில் ஜாசிங்ஹ மேலும் குறிப்பிட்டார்.

சுற்றுலாக்குழு பயணித்த இடங்கள் மற்றும் சந்தித்த நபர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கோரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு அரசு முறையான திட்டத்துடன் கூடிய பரந்துபட்ட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. அதற்காக நேற்று முன் தினம் முதல் தென்கொரியா, இத்தாலி மற்றும் ஈரான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வருகை தருபவர்களை நோய்தடுப்பு செயற்பாட்டுக்கு உட்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டில் இருந்து வருகை தருபவர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு அரசு வேண்டுகோள்விடுத்துள்ளது – என்றுள்ளது. (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச். 12

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**வவுனியா பிரதேசத்தில் -**

முகத்தாங்குளம் 2 ஆம் வட்டாரம், பகல அளுத்வத்த கிராமம், கோவில்புதுக்குளம் கிராமம், சூடுவெந்தபுலவு கிராமம் ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில் -**

இசைமழைத்தாழ்வு, நரிக்காடு, தலைமன்னார் கிராமம், தலைமன்னார் Palmyra house, தலைமன்னார் நீர்ப்பாசனசபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடை இருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் உடனடி பதவி மாற்றம்!

### ஆளுநர் சாள்ஸ் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கே.தெய்வேந்திரன் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் இந்த பதவிநீக்க உத்தரவை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளராக கே.தெய்வேந்திரன் கடந்த மார்ச் 4ஆம் திகதி தொடக்கம் மீளவும் அந்தப் பதவியில் தொடர ஆளுநரால் கடிதம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் மார்ச் 4ஆம் திகதி நியமனக் கடிதத்தை நேற்று நடை முறைக்கு வரும்வகையில் மீளப்பெறு வதாக ஆளுநரால் நேற்று கடிதம் வழங்கப்பட்டுள்ளது.



அத்துடன் அவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உதயங்க வீரதுங்கவின் மறியல் மீண்டும் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 12

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை இம்மாதம் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியல் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை விமானப் படைக்கு உக்ரைனிலிருந்து மிக் ரக விமானங்களைக் கொள்வனவு செய்தபோது, முறையற்ற வகையில் தலையீடு செய்து, கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டார்.

இதனை அடுத்து பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி அவர் தாக்கல் செய்த பிணைக் கோரிக்கையும் கடந்த 26 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அவரின் விளக்கமறியல் நேற்றுவரை நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உதயங்க வீரதுங்கவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் ரங்க திசாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

கொரோனா பீதி

# பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின், சீனா, இத்தாலி ஐந்து நாடுகளில் இருந்து இந்தியா வரத் தடை



புதுடெல்லி,மார்ச்12

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின் நாட்டினர் இந்தியா வர தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ், உலகம் முழுவதும் நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி அச்சுறுத்தி வருகிறது. இந்தியாவிலும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது வரை இந்தியாவில் 61 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாட்டினர் இந்தியா வருவதற்குத் தற்காலிகமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்நாடுகளில் இருந்து இந்தியா வருபவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த விசாக்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன எனக் குடியுரிமைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இம்மூன்று நாடுகளை சேர்ந்தவர்களைத் தவிர, இங்கு கடந்த முதலாம்திகதிக்கு பின்னர் சென்ற பிற நாட்டினருக்கும் இந்தியாவுக்குள் வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சீனா, இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியா வர தற்காலிகமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா வைரஸின் தாக்கத்தினால் காஷ்மீரில் தியேட்டர்களுக்கு மூடுவிழா!



கொரானா வைரஸ் பாதிப்பு காரணமாக ஜம்முவில் வருகிற 31 ஆம் திகதி வரை சினிமா திரையரங்குகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பேசிய ஜம்மு – காஷ்மீர் முதன்மை செயலாளர் ரோகித் கன்சால், பந்திப்போரா, பாரமுல்லா, ஸ்ரீநகர் மற்றும் புத்கம் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஆரம்பப் பள்ளிகளும் வருகிற 31 ஆம் திகதி வரை மூட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஜம்முவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஒருவர் ஆளாகி இருப்பது கண்டறியப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

## இந்தியாவின் துறைமுகங்களுக்குள் நுழைவதற்கு வெளிநாட்டுப் பயணிகள் கப்பல்களுக்குத் தடை!

கொரானா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக எதிர்வரும் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு பயணிகள் கப்பல்கள் (cruise ships) இந்தியத் துறைமுகங்களில் நுழைய மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இதுகுறித்து சென்னை துறைமுகக் கழக போக்குவரத்து பிரிவு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதில் கொரானா அச்சுறுத்தலால், வெளிநாடுகளை சேர்ந்த பயணிகள் கப்பல்கள், இந்திய துறைமுகங்களில் நுழைய மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை தடை விதிப்பதென்று மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதலால் எந்த வெளிநாட்டில் இருந்து பயணிகள் கப்பல் வந்தாலும் சென்னை துறைமுகத்தில் 31 ஆம் தேதி வரை நுழைய அனுமதியளிக்கப்பட மாட்டாது எனவும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



# வெளிநாட்டுப் பயண விவரங்களை மறைத்தால் குற்றம் என அறிவிப்பு

திருவனந்தபுரம்,மார்ச்12

வெளிநாட்டில் இருந்து வரும் இந்தியர்கள், தங்களின் பயண விவரங்களை மறைத்தால் அது குற்றமாக கருதப்படும் என்று கேரள அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. கேரளாவில் நேற்று ஒரே நாளில் மட்டும் புதிதாக 8 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருந்தது தெரியவந்தது. அதேபோல், கர்நாடகா, மராட்டியம் ஆகிய மாநிலங்களில் தலா 3 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 61 ஆக உயர்ந்துள்ளது.

கேரளாவில் கடந்த சில நாட்களில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இந்த சூழலில், கேரளாவுக்கு வரும் பயணிகள் தங்களின் முந்தைய



பயண விவரங்களை மறைத்தால், அது பொது சுகாதார சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும் என்று கேரள சுகாதாரத் துறை மந்திரி கே.கே லைஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கேரளாவில் புதிதாக வைரஸ் தொற்றுக்கு உள்ளான 8 பேரில் 2 பேர், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட 3 வயதுக் குழந்தையின் பெற்றோர் ஆவர். இவர்கள் இத்தாலியிலிருந்து வந்ததமையை அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் மறைத்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

## ஏழுமலையானைத் தரிசிக்க முகமூடி அணிந்து வாருங்கள்

திருப்பதி தேவஸ்தானம் வேண்டுகோள்

கொரானா தொற்று முன்னெச்சரிக்கையாக ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்கள் மாஸ்க்(முகமூடி) மற்றும் சானிட்டரைசரை(தொற்றுநீக்கி) கொண்டு வருமாறு திருப்பதி திருமலை தேவஸ்தானம் கேட்டுக் கொண்டுள்ளது.

கோடை நெருங்கும் நிலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஏழுமலையான தரிசிக்க வருவார்கள் என்பதால், பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பது குறித்து திருமலையில் தேவஸ்தான உயர் அதிகாரிகள் விவாதித்தனர்.

அதன்படி அலிபிரி மற்றும் ஸ்ரீவாரி மெட்டு பகுதியில் தெர்மல் கன் (உடற்சூட்டைக் கண்டுபிடிக்கும் கருவி) உள்ளிட்ட மருத்துவஉபகரணங்களுடன் சிறப்பு குழுவினர் சோதனை நடத்துவர். அதில் கொரானா அறிகுறிகள் இருப்பது தென்பட்டால் திருமலைக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

அதே போன்று இருமல், ஜலதோம், காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள பக்தர்கள் தங்களது பயணத்தைத் தள்ளி வைக்குமாறும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவுறுத்தியுள்ளது.

# மத்தியப் பிரதேச காங். அரசு பெரும்பான்மையை இழந்தது

மத்தியப் பிரதேசத்தில் ஜோதிராதித்ய சிந்தியாவின் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் 22 பேர் பதவி விலகியுள்ளமையால் காங்கிரஸ் அரசு பெரும்பான்மை இழந்துள்ளது.

2018 சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தபோது, முதலமைச்சர் பதவி ஜோதிராதித்யாவுக்கு வழங்கப்படவில்லை. இதனால் அதிருப்தியில் இருந்த அவர் தனது பதவி விலகல் கடிதத்தை சோனியா காந்திக்கு நேற்று முன்தினம் அனுப்பி விட்டுப் பிரதமர் மோடியையும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவையும் சந்தித்துப் பேசினார்.

இதனால் அவர் விரைவில் பா.ஜ.கவில் இணையவுள்ளமை உறுதியாகியுள்ளது. இந்த நிலையில் சிந்தியா ஆதரவு எம்.எல்.ஏக்கள் 22 பேர் பதவி விலகல் கடிதங்களை ஆளுநருக்கு அனுப்பியுள்ளனர். இந்த பதவி விலகல் கடிதங்கள் ஏற்கப்பட்டால் மத்திய பிரதேசத்தின் கமல் நாத் அரசு பெரும்பான்மையை இழக்கும்.

இதனால் ஆட்சியை தக்க வைக்கும் நடவடிக்கை யாக போபாலில் காங்கிரஸ் சட்டமன்றக் குழுக் கூட்டத்தை கமல் நாத் கூட்டினார். பதவி விலகல் கடிதம் அனுப்பிய எம்.எல்.ஏக்கள் தவிர எஞ்சிய 92 எம்.எல். ஏக்களும் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 88 பேர் மட்டுமே வந்திருந்தனர். இதனால் மத்திய பிரதேச அரசியலில் உச்சகட்டப் பர பரப்பு நிலவி வருகிறது.

இதற்கிடையே பெரும்பான்மையை நிரூபிக்க விரைவில் கமல்நாத்துக்கு அம்மாநில ஆளுநர் உத்தரவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, குதிரை பேரம் நடைபெறலாம் என கருதப்படுவதால் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 107 பேரும் டெல்லி அருகே குர்கானில் உள்ள சொகுசு விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கிரஸும் தனது எஞ்சிய எம்.எல்.ஏக்களை ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள சொகுசு விடுதிக்கு அழைத்துச் செல்ல உள்ளது. மேலும் நம்பிக்கை வாக்கெடுப்பில் கமல்நாத் அரசு தோல்வியை தழுவும் நிலையில் மீண்டும் அங்கு பா.ஜ.க. அரசை அமைக்க சிவராஜ் சிங் சவுகான் முயன்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்தியப்பிரதேசத்தில் 2018 சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்ற நிலையில் ஜோதிராதித்யா வுக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கும் என அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்த்தனர். திக்விஜய்சிங், கமல் நாத் இருவரும் சேர்ந்து அதை முறியடித்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் ஜோதிராதித்யா, 2019 மக்களவைத் தேர்தலிலும் தோல்வியடைந்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் பதவி கிடைக்கும் என அவர் எதிர்பார்த்திருந்த நிலையில் அதையும் கிடைக்க விடாமல் செய்யும் வகையில் திக்விஜய் சிங், கமல்நாத் அணியினர் பிரியங்காவை மாநிலங்களவை உறுப் பினராக நிறுத்த வேண்டும் எனக் கருத்துத் தெரிவித் தனர். தனக்கான ஒவ்வொரு வாய்ப்பும் பறிக்கப்பட்டமையால், காங்கிரஸில் இருந்து விலகி பா.ஜ.கவில் இணையும் முடிவை ஜோதிராதித்யா எடுத்துள்ளார் எனச் சொல்லப்படுகிறது. தனது ஆதரவு எம்.எல்.ஏக்கள் 22 பேரையும் பதவி விலகச் செய்து காங் கிரஸ் ஆட் சியை அவர் ஆட்டங்காணச் செய்துள்ளார்.

# கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் முதல் வெற்றி என்கின்றார் சீன அதிபர்






கொரோனா வைரஸ் முதன்முதலில் பரவத் தொடங்கிய ஹூபே மாகாணத்தில் அதன் தாக்கம் கட்டுக்குள் வந்திருப்பதாக சீன அதிபர் ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உயிரிழப்புக்கும், ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்படவும் காரணமாக உள்ள கொரோனா வைரஸ் ஹூபே மாகாணத்தின் வுகான் நகரில் இருந்தே பரவியது. நோய்த் தொற்று ஏற்பட்ட பின்னர் அந்த நகரில் சீன அதிபர் நேற்று முன்தினம் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ஹூபே மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கணிசமான அளவில் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும், வைரஸ் பரவலின் தீவிரப் போக்கைக் குறைத்து, நிலைமையை மாற்றியமைப்பதில் முதல்கட்ட வெற்றியை அடைந்துள்ளதாகவும் ஜின்பிங் குறிப்பிட்டார்.

# அமெரிக்காவிலும் மிகத் தீவிரமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

அமெரிக்காவில் கொரானா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்கும் நிலையில், மக்கள் திரளாகக் கூடுவதற்குத் தடை விதித்தும், பள்ளிகளை மூடியும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



நோய்த்தொற்று வேகமாக இருப்பதை அடுத்து மஸாசுசெட்ஸ் (Massachusetts) மாநிலத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்படுவதாக ஆளுநர் சார்லி பேக்கர் (Charlie Baker ) அறிவித்துள்ளார். இந்த மாநிலத்தில் 92 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், வொஷிங்டனைச் சேர்ந்த 24 பேர், ஃபுளோரிடாவில் 2 பேர், கலிபோர்னியாவில் 3 பேர், நியூ ஜெர்ஸி, சவுத் டகோட்டாவில் தலா ஒருவர் என அமெரிக்காவில் கொரானாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

கொரானா தொற்றால் அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பான பிரச்சாரக் கூட்டங்களும் முடங்கியுள்ளன. நியூயோர்க்கில் தொற்று அதிகமாக உள்ள நியூ ரோச்சலில் (New Rochelle) ஒரு மைல் சுற்றளவை கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மாநில ஆளுநர் ஆண்ட்ரூ கவுமோ (Andrew Cuomo) அறிவித்துள்ளார்.

இதை அடுத்து அங்கு வசிக்கும் சுமார் 80 ஆயிரம் மக்களின் நடமாட்டம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

# கைதிகளை விடுவிக்கும் உத்தரவில் ஒப்பமிட்டார் ஆப்கானிஸ்தான் அதிபர்

சிறையில் உள்ள தாலிபன் கைதிகளைவிடுதலைசெய்வதற்கானஉத்தரவில் ஆப்கான் அதிபர் அஷ்ரப் கனி கையெழுத்திட்டார். சிறையில் இருந்து தாலிபன் கைதிகள் விடுவிக்கப்படும் போது அவர்களை அழைத்துச் செல்வதற்கு வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

பதிலுக்கு சிறைப்பிடிக்கப்பட்ட ஆயிரம் இராணுவ வீரர்களை விடுவிக்க தாலிபன் ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்காவுக்கும் தாலிபன்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுகளில் இந்த ஒப்பந்தம் முக்கியமான அம்சமாக இருந்தது.

ஆப்கன் சிறைகளில் உள்ள 5000 தாலிபான்களில், முதல்கட்டமாக 1500 பேர் விடுவிக்கப்பட உள்ளனர். அரசு அமைத்துள்ள குழு தாலிபான்களுடன் பேச்சு நடத்தியபின் மீதமுள்ளவர்களை விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எச்.ஐ.வி யை வென்ற இரண்டவது நபர்..!

உலகில் எச்.ஐ.வி.யால் (எய்ட்ஸால்) பாதிக்கப்பட்டு குணமடைந்த இரண்டாவது நபர் குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளன. 40 வயதான ஆதம் கேஸ்டில்ஜோ (Adam Castillejo) எவ்வித மருந்துகளும் இன்றி கடந்த 30 மாதங்களாக நலமுடன் வாழ்கிறார் என மருத்துவ இதழான த லான்செட் (The Lancet) தெரிவித்துள்ளது.

இந்த நபருக்கு எச்.ஐ.வி. இருப்பது கடந்த 2003 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக நீண்ட காலம் மருந்து, மாத்திரைகள் எடுத்து குணமடைந்த அவருக்கு கடந்த ஆண்டு கூடுதலாக எலும்பு மஜ்ஜை அறுவை மாற்று சிகிச்சை அளிக்கப்பட்டது.

எச்.ஐ.வி.யில் இருந்து முதன்முதலாக குணமான ஜெர்மன் நபர் தமோத்தி பிரவுனுக்கும் (Timothy Brown) கடந்த 2007 இல் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை நடத்தப்பட்டது. அவர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நலமுடன் உள்ளார். அதே சமயம் எல்லா எச்.ஐ.வி. நோயாளிகளுக்கும் இந்த மாற்று சிகிச்சை பலன் தராது என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக (University of Cambridge) மருத்துவ நிபுணர் ரவீந்திர குமார் குப்தா தெரிவித்திருக்கிறார்.

# ஜனநாயகக் கட்சி வேட்பாளருக்கான போட்டியில் ஜோ பிடன் முன்னிலையில்



அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருக்குரிய போட்டியில் முன்னிலை பெற்றுள்ள ஜோ பிடன், ட்ரம்பை வீழ்த்த ஒன்றிணைந்து செயல்படுவோம் என சக போட்டியாளர் பெர்னி சாண்டர்ஸ்க்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் களமிறங்கும் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்ப்பை எதிர்த்து களம் காணும், ஜனநாயக கட்சி வேட்பாளருக்கு பலமுனை போட்டி நிலவியது.

இதையடுத்து ஜனநாயகக் கட்சி வேட்பாளரை தேர்வு செய்யவே அங்கு தேர்தல் நடைபெற்று வருகிறது. அதில் பெருவாரியான இடங்களில் அபார வெற்றி பெற்றுள்ள முன்னாள் துணை அதிபர் ஜோ பிடன், இறுதியாக மிச்சிகன் மாநில தேர்தல் முடிவிலும் வெற்றி வாகை சூடியுள்ளார்.

இதையடுத்து பிலதெல்பியாவில் தனது ஆதரவாளர்களிடையே உரையாற்றிய அவர், பொதுவான நமது இலக்கை அடைய இணைந்து செயல்படுவோம் என சக போட்டியாளர் பெர்னி சாண்டர்ஸ்க்கு அழைப்பு விடுத்தார்.

# பிரிட்டிஷ் சுகாதார அமைச்சரையும் விட்டு வைக்கவில்லை கொரோனா!

## இங்கிலாந்து நாடாளுமன்றம் ஒத்திவைப்பு?

லண்டன்,மார்ச்12

இங்கிலாந்து சுகாதாரத்துறை அமைச்சர் நாடின் டோரிஸ் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனாவில் உகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி கொரோனா வைரஸ் தோன்றியது. இந்த 3 மாத காலத்தில் அந்த வைரஸ் நூறுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பரவி விட்டது. சீனாவில் அதன் தாக்கம் சற்றே குறைந்து வந்தாலும் இத்தாலி, தென்கொரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகளில் ஆதிக்கம் வலுத்து வருகிறது.




வல்லரசு நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியவற்றையும் கொரோனா வைரஸ் விட்டுவைக்கவில்லை. இங்கிலாந்தில் தற்போது வரை கொரோனா வைரஸுக்கு 373 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 பேர் கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், இங்கிலாந்து சுகாதாரத்துறை மந்திரி நாடின் டோரிஸும் கொரோனா வைரஸால் பாதிக் கப்பட்டுள்ளார்.

தனக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதை உறுதி செய்த மந்திரி நாடின் டோரிஸ், தற்போது தனது வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொண்டு இருக்கிறார் எனவும் தெரி வித்துள்ளார். தற்போது, தாம் குணம் அடைந்து வருகிறார் எனத் தாம் நம்புகின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நாடின் டோரிஸ், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் உள்பட நூற்றுக்கணக்கானோரைத் தொடர்ந்து சந்தித்துள்ளார். இதனால், கொரோனா வைரஸ் அவர் மூலமாக எவருக்கும் பரவியிருக்குமோ என்ற கவலை, உடனடியாக இங்கிலாந்து சுகாதாரத்துறை அதிகாரிகள் மத்தியில் எழுந்துள்ளது.

அமைச்சர் நாடின் டோரிஸுக்கு யார் மூலமாக கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டது என்பது குறித்தும் அதிகாரிகள் கண்காணிக்கத் தொடங்கியுள்ளனர். தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த எம்.பியும் சுகாதாரத்துறை அமைச்சருமான நாடின் டோரிஸ் கொரோனா வைரசால் பாதிக்கப் பட்டுள்ளமையால், இங்கிலாந்து நாடாளுமன்றம் தற்கா லிகமாக ஒத்திவைக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikathir



# பூண்டு சாப்பிட்டால் கொரோனா வைரஸ் குணமாகுமா?

## சில வாட்ஸப் வதந்திகளும், யதார்த்த உண்மைகளும்

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வருகிறது. ஆனால் இதுவரை அதற்குத் தடுப்பு மருந்து ஏதும் கண்டறியப்படவில்லை. இந்நிலையில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கான மருந்து குறித்தும் பாதுகாப்பாக இருப்பதும் குறித்தும் பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன. இதில் மிகவும் ஆபத்தானது முதல் ஆபத்தில்லாதது வரை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சமூக வலைதளங்களில் தற்போது அதிகம் பரவி வரும் சில வதந்திகளும் உண்மையில் அறிவியல் கூறுவதும் என்ன என்பதை பார்ப்போம்.

### பூண்டு

பேஸ்புக்கில் பெரிதும் பகிரப்படுவது, கொரோனாவிலிருந்து தப்பிக்க பூண்டு சாப்பிடுங்கள் என்பது ஆகும். பூண்டு சாப்பிடுவது நல்லது . அதில் நுண்ணுயிரை எதிர்க்கும் தன்மையுடையது. ஆனால் அதை சாப்பிட்டால் புதிய கொரோனா வைரஸில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை என உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

இது போன்ற மருந்துகள் ஆபத்தானவை இல்லை. ஆனால் மருத்துவ ரீதியாக இவை கொரோனா பாதிப்பில் இருந்து காப்பாற்றும் என்பதும் இல்லை.

'தி சௌத் சைனா மார்னிங் போஸ்ட்' என்ற சீனப் பத்திரிகை ஒரு பெண் 1.5 கிலோ பூண்டை சாப்பிட்டதால் தொண்டை எரிச்சல் என்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுவாக காய்கறி மற்றும் பழங்களை சாப்பிடுவதும், தண்ணீர் நன்றாக குடிப்பதும் ஆரோக்கியத்துக்கு நல்லது. ஆனால் இந்த குறிப்பிட்ட உணவுஇந்தவைரஸிலிருந்து காப்பாற்றும் என்று எதுவும் இல்லை.



### அற்புத உலோகங்கள்

ஜோர்டன் சாதர் என்னும் யூ டியூப் வீடியோ தயாரிப்பவர் மிராகல் மினரல் சப்லிமெண்ட் (அற்புத உலோகச் சத்து) எனப்படும் எம்.எம்.எஸ். கொரோனா வைரஸை அழிக்கும்எனகூறியுள்ளார்.இவரை ஆயிரக்கணக்கனோர் பின் தொடர்கின்றனர்.

இவர் குறிப்பிடும் இந்த அற்புத உலோக சத்து க்ளோரின் டை ஆக்ஸைடைக் கொண் டது.

சாதர் மற்றும் பலர் இதை கொரோனா பரவத் தொடங்கியதற்கு முன் ஜனவரி மாதமே ட்வீட் செய்தனர். க்ளோரின் டை ஆக்ஸைடு புற்று நோயை மட்டுமல்ல கொரோனாவையும் அழிக்கும் என அவர் ட்வீட் செய்திருந்தார்.

கடந்த ஆண்டு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம் இந்த எம்.எம்.எஸ். குடிப்பதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து எச்சரித்தது. பல நாடுகளின் சுகாதார அதிகாரிகளும் இது குறித்து எச்சரித்துள்ளனர்.

இந்த பொருளை சாப்பிடுவது பாதுகாப்பானது என எந்த ஓர் ஆராய்ச்சியும் இல்லை என அமெரிக்க உணவுத்துறை கூறியுள்ளது. மேலும் இதைக் குடிப்பதனால் மயக்கம், வாந்தி, வயிற்றுபோக்கு போன்றவை ஏற்படலாம். மேலும் நீர்ச்சத்து குறையும் எனவும் எச்சரித்துள்ளனர்.

### வீட்டில் தயாரிக்கப்படும் கை சுத்திகரிப்பான்

கை சுத்திகரிப்பானுக்கு தட்டுபாடு இருப்பதாக பல செய்திகள் வெளியாகியுள்ளன. ஏனென்றால் கை கழுவுவது வைரஸிலிருந்து தப்பிக்கும் ஒரு வழி என்பதால் இந்நிலை நிலவுகிறது.

இத்தாலியில் கை சுத்திகரிப்பான் தட்டுப்பாடு இருப்பதைத் தொடர்ந்து வீட்டிலேயே அதை எவ்வாறு தயாரிப்பது என்ற செய்முறை சமூக வலைதளத்தில் பகிரப்பட்டுள்ளது.

ஆனால் அவ்வாறு தயாரிக்கப்படுவது, தரையை சுத்தப்படுத்துவதற்கு பயன்படும் ஒரு பிரபல நிறுவனத்தின் பொருளின் செய்முறை என்றும் அதைவெறும்கையால்தொடவேண்டாம் எனவும்விஞ்ஞானிகள்பரிந்துரைசெய்துள்ளனர்

பொதுவாக ஆல்கஹால் கலந்திருக்கும் ஹேண்ட் ஜெல் எமொலியண்ட் என்னும் தோலை மென்மையாக்கும் ஒரு வேதிப் பொருளைக் கொண்டிருக்கும்.

கை சுத்திகரிப்பானை வீட்டில் தயாரிக்க முடியும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை என பேராசியர் சாலி ப்ளூம்ஃபீல்ட் கூறுகிறார்.

தரையை சுத்தப்படுத்த சாதாரண சுத்திகரிப்பான் போதும் என்கின்றது அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் பாதுகாப்பு மையம்.

### கொலாடியல் சில்வர் என்னும் வெள்ளித் திரவம்

கோலாடியல் சில்வர் பயன்படுத்துவதை தொலைக்காட்சியில் மத பிரசாரம் செய்யும் ஜிம் பேக்கர் தன்னுடைய நிகழ்ச்சியில் ஊக்கப்படுத்தி வருகிறார்.


மிக நுண்ணிய வெள்ளித் துகள்கள் உள்ள ஒரு திரவத்தையே கொலாடியல் சில்வர் என்கின்றனர். ஜிம் பேக்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒருவர் 12 மணி நேரத்தில் கொலோடியல் சில்வர் கொரோனா பாதிப்பிலிருந்து காப்பாற்றும் எனக் கூறியுள்ளார். ஆனால் இது வரை அது கோவிட்19 பாதிப்புக்கு பயன்படுத்தப்படவில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

இது தொடர்பான செய்தி ஃபேஸ்புக்கில் பெரிதும் பகிரப்படுகிறது. அதுவும் மெடிகல் ஃப்ரீடம் என்னும் குழுவால் பகிரப்படுகிறது. அந்த குழு மருத்துவ பரிந்துரை அளிப்பதாக சந்தேகத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த கோலாடியல் சில்வர் அனைத்து உடல் நிலைக்கும் ஏற்றது எனவும், ஆண்டிசெப்டிக் போல செயல்படும் எனவும், எதிர்ப்புத் திறனை வளர்க்கும் எனவும் கூறப்படுகிறது. ஆனால் அமெரிக்க சுகாதாரத் துறை அதிகாரிகள் அவ்வாறு எந்த ஆதாரமும் இல்லை எனக் கூறியுள்ளனர். மேலும் இதை பயன்படுத்துவதால் சிறுநீரக கோளாறு, இதயக் கோளாறு, அர்ஜீரியா( தோல் நீலமடைதல்) போன்றவை ஏற்படும் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இரும்பு, துத்தநாகம் போல் வெள்ளி உடலின் இயக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கவில்லை.

இப்போது இது போன்ற உலோகங்களைப் பயன்படுத்துமாறு பரிந்துரைக்கும் பதிவுகளுக்கு மேல் பேஸ்புக் எச்சரிக்கை செய்தி ஒன்று தோன்றுகிறது.







### 15 நிமிடத்திற்கு ஒரு முறை தண்ணீர் குடிப்பது

ஒரு ஜப்பான் மருத்துவரின் பரிந்துரை என்ற பெயரில் 15 நிமிடத்திற்கு ஒருமுறை தண்ணீர் குடிப்பது வாய் வழியே உள்ளே செல்லும் வைரஸை தங்க விடாமல் செய்யும் என ஒரு பதிவு பெரிதும் பகிரப்பட்டது. இந்த கூற்றின் அரபு மொழி பெயர்ப்பு 2,50,000 முறை பகிரப்பட்டுள்ளது.

ஆனால் பேராசிரியர் ப்ளூம்ஃபீல்டு இதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்கிறார்.

காற்று வழியாக பரவும் வைரஸ்கள் சுவாசிப்பதால் உடலுக்குள் செல்லும். அவற்றில் சில வாய் வழியே உள்ளே செல்லும். ஆனால் தொடர்ந்து தண்ணீர் குடிப்பது வைரஸ் தாக்குதலில் இருந்து தப்பிக்க வழி செய்யாது.

ஆனால் தண்ணீர் அதிகம் குடிப்பது உடலுக்கு நல்லது.

### வெப்பம் மற்றும் ஐஸ் கிரீம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது

சிலர் வெப்பம் வைரஸைக் கொல்லும் என்கின்றனர். இதனால் வெந்நீர் குடிப்பது, வெந்நீரில் குளிப்பது அல்லது ஹேர் ட்ரையர் பயன்படுத்துவது போன்றவை பரிந்துரை செய்யப்படுகின்றன.

வெந்நீர் குடிப்பது மற்றும் வெயிலில் நிற்பது போன்றவை வைரஸ் தாக்குதலில் இருந்து தப்பிக்க சிறந்த வழி,மேலும் ஐஸ் கிரீம் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என யுனிச்செவ் கூறியதாகச் சொல்லி வெளியாகும் பதிவுகள் பல்வேறு நாடுகளில் பகிரப்பட்டன.

இதெல்லாம் உண்மையானவை அல்ல என்கிறார் யுனிசெவ் அமைப்பை சேர்ந்த சார்லட் கோர்னிக்ஸ்.

வெயில் காலத்தில் ஃப்ளூ வைரஸ் உடலின் வெளிப்புறத்தில் நிலைத்திருக்காது. ஆனால் இது கொரோனா மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்கிறார் இவர்.

உடல் வெப்பத்தை அதிகப்படுத்துவது அல்லது வெயிலில் நிற்பது போன்றவை அவ்வளவு பயனுள்ளன்வாகத்தெரியவில்லை என பேராசிரியர் ப்ளூம்ஃபீல்ட் கூறியுள்ளார். வைரஸ் உடலுக்குள் வந்துவிட்டால் உடலின் எதிர்ப்பு சக்தியே அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிறார் அவர்.

ஒரு வைரஸை கொல்ல 60 டிகிரி வெப்பநிலை தேவை. இதனால் துணி துவைக்க 60 டிகிரி வெப்நிலையுள்ள நீரை பயன்படுத்துவது நல்ல யோசனை. ஆனால் நாம் 60 டிகிரி வெப்நிலை கொண்ட நீரில் குளிப்பது நல்லது கிடையாது. வெந்நீரில் குளிப்பது, வெந்நீர் குடிப்பது போன்றவற்றால் நம் உடலின் வெப்பநிலை மாறாது.

நன்றி: பிபிசி தமிழ்

# கூட்டமைப்பின் முடிவை வரவேற்கிறார் வேலுகுமார்

கொழும்பு, மார்ச் 12

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதை தவிர்த்து, சமூக பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரிவர நிறைவேற்றியுள்ளமை வரவேற்கத்தக்கது. – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

மனோ கணேசன் வெறுமனே கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மட்டும் அல்லர், அவர் தேசியத் தலைவர்களில் ஒருவர் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்கு புரிந்து வைத்திருக்கின்றது.

வாக்குகள் பிளவு படுவதை தடுத்து மனோவின் வெற்றியை உறுதிப்படுத்திடுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு கொழும்பில் களம் இறங்குவதை தவிர்த்துக்கொண்டுள்ளது. அதன் மூலம் தமது சமூக பொறுப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு சரிவர நிறைவேற்றியுள்ளமை வரவேற்கத்தக்கது. இது எமது வடக்கு – தெற்கு உறவை மேலும் பலப்படுத்துவதாக அமையும்.

மனோ கணேசன் தேசிய அரசியலில் முக்கிய பாத்திரத்தை வகித்துவருகின்றார். ஐக்கிய தேசிய முன்னணி நல்லாட்சியை ஏற்படுத்தியதில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு.

இன்று மீண்டும் தேசிய அரசியல் சக்தி ஒன்றை உருவாக்கும் பணியில் முக்கிய இடம் வகிக்கின்றார். அதன்படி நாளைய ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் ஐக்கிய மக்கள் சக்தி யின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு அவருக்கு உண்டு.



இந்த முன்னெடுப்பு சிறுபான்மை சமூகத்தின் நாளைய நாளைத் தீர்மானிக்கும் அடித்தளமாகும். இம் முக்கியத்துவத்தை கொழும்பில் சில குட்டி அரசியல் அனாதைகள் அறியாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் நன்கு அறிவார்கள்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக மட்டும் அல்லாது எமது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவராகவும், தமிழ் பேசும் மக்களின் தேசிய தலைவர்களில் ஒருவராகவும் மனோ கணேசன் முன் வரிசையில் அமர்வார். அதற்கு சவால் விட எந்த சக்தியும் இல்லை. ஏனெனில் எம்மோடு இருப்பது மக்கள் சக்தி. – என்றுள்ளது.(ஐ)

# பாடசாலைக்குள் புகுந்த குழு ஆசிரியர் மீது கடும் தாக்குதல்

## அச்செழுப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலைக்குள் புகுந்த கும்பல் ஒன்று அங்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரைத் தாக்கியுள்ளது. பழைய மாணவர்கள் ஐவர் அடங்கிய கும்பல் ஒன்றே இந்தச் செயலைச் செய்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது என்று பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பழைய மாணவர்கள் சிலருக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் உள்ள தனிப்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காலை பாடசாலை வளாகத்துக்குள் புகுந்த பழைய மாணவர்கள் 5 பேர், ஆசிரியரின் கையிலிருந்த பாடப்புத்தகங்களைப் பறித்து வீசி எறிந்துள்ளனர்.

அத்துடன், ஆசிரியரின் கழுத்தை நெரித்து தள்ளிவிட்ட பழைய மாணவர் ஒருவர், அவரை பாடசாலையிலிருந்து வெளியேறுமாறு மிரட்டியுள்ளார். எனினும் பழைய மாணவர்களால் ஆசிரியர் தாக்கப்படுவதை அதிபர் வேடிக்கை பார்த்தவாறு இருந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபரால் பழைய மாணவர்களுக்கு எதிராக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டபோதும் பின்னர் சமாதானமாகச் செல்வதாக முறைப்பாடு மீளப்பெறப்பட்டுள்ளது என்று பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தன் மீதான தாக்குதல் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு வழங்குமாறு ஆசிரியர் கோரிய போதும் பாடசாலை அதிபர் அதற்கு அனுமதி மறுத்துள்ளார் எனக் கூறப்பட்டது. (ஐ – 07)

# இணையங்களை முடக்க நேரிடும்!

கொழும்பு, மார்ச் 12

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என சில இணையத்தளங்களில் வெளியான தகவல்களில் எந்த வித உண்மையும் கிடையாது என்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.




அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனாவை காரணம் காட்டித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் எனக்கு அறிவுறுத்தப்படவுமில்லை. அப்படியான முடிவை ஆணைக்குழு ஆராயவுமில்லை. அந்த இணையச் செய்தி புரளியானது. இவ்வாறான புரளிகளை பரப்பும் ஊடகங்கள் தொடர்பில் ஆணைக்குழு உன்னிப்பாக அவதானித்து வருகிறது. கட்டு மீறிப் போகுமிடத்து அந்த இணையங்களை முடக்க நடவடிக்கை எடுக்க நேரிடலாம் – என்றார். (ஐ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இலங்கையர் செல்வதற்குத் தடை!

## கொரோனா தாக்கம் அதிகரிப்பதை அடுத்து

கொழும்பு, மார்ச் 12

கொரோனா வைரஸ் வேகமாக பரவுவதை அடுத்து இலங்கையர்கள் எவரும் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டாம் என இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

தொழில் வாய்ப்புக்காக ஐரோப்பிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பெருமளவு இலங்கையர்கள் செல்கின்றனர். இந்நிலையில் அந்த நாடுகளில் கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள இந்நிலையில் இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும்.

திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையர்கள் தொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் சேவை செய்யும் நாடுகளின் தூதரகங்களிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரையிலும் இதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய தகவல் பெற்றுக்கொள்வதற்காக அந்த நாடுகளின் தூதரக அலுவலகங்களின் விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் 1989 என்ற இலக்கத்தை அறிமுகப்படுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா முகாமுக்கு எதிராக மட்டக்களப்பில் கடையடைப்பு

## இன்று நடத்துவதற்கு ஏற்பாடு

மட்டக்களப்பு, மார்ச் 12

கொரோனா தொற்று வேகமாகப் பரவிவரும் தென்கொரியா, ஈரான், இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்கள் மட்டக்களப்பு – புணானையில் அமைந்துள்ள மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தில் தங்கவைக்கப்பட்டு, 14 நாள்களுக்குக் கண்காணிக்க அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மட்டக்களப்பு மாவட்டம் இன்று முழுமையாக முடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள தமிழ் உணர்வாளர் கள் அமைப்பின் தலைவர் க. மோகன் –

எமது நாட்டுப் பிரஜைகள் எவரேனும் பாதிக்கப்பட்டால், அவர்களைக் காப்பாற்ற வேண்டிய தார்மிகப் பொறுப்பு, எம் எல்லோருக்கும் இருக்கின்றபோதிலும், தொற்று வேகமாக பரவிவரும் நாடுகளிலிருந்து வருபவர்களை, இங்கு அனுமதிக்க முடியாது.

மட்டக்களப்பு மாவட்டம், சகல வழிகளிலும் பின்தள்ளப்பட்டுள்ள நிலையில், ஒருவருக்கேனும் நோய்த் தொற்று ஏற்பட்டால், மாவட்டம் முழுவதும் தனிமைப் படுத்தப்பட்டுவிடும். இதனால், அரசின் இந்த முடிவை எதிர்த்து இன்று மாவட்டம் முடக்கப்படும்.

மாவட்டத்தைச் சேர்ந்த எல்லோரும் இன்று வீட்டுக்குள் முடங்கி, தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டுவதுடன் உலகில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் நலன்பெறவேண்டி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும் – என்றார்.






# இந்திய கிரிக்கெட் ஜாம்பவான்களிடம் தோல்வியுற்ற இலங்கைச் சிங்கங்கள்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் வீரர்களுக்கும் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் வீரர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற ரி – 20 போட்டியில், இந்திய ஜாம்பவான்கள் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர்களை உள்ளடக்கிய இந்தத் தொடரானது இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது.

மும்பையில் இடம்பெற்ற தொடரின் மூன்றாவது போட்டியில், நேற்று முன்தினம் இலங்கை மற்றும் இந்தியக் கிரிக்கெட்டின் முன்னாள் ஜாம்பவான் வீரர்கள் அணிகள் பங்கேற்றன.

இதில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய ஜாம்பவான் அணி, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அந்த வகையில், முதலில் துடுப்பாடக் களம்புகுந்த இலங்கை ஜாம்பவான் வீரர்கள் மிக மெதுவாக ஓட்டங்களைப் பெற்றனர்.

எந்தவொரு வீரர்களும் ரி – 20 போட்டிகளுக்குரிய அதிரடியை வெளிப்படுத்தாத போதிலும், இறுதியாக களமிறங்கிய ரங்கன ஹேரத் 3 பந்துகளில் 3 பவுண்டரிகளை விளாசி 12 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இதனால், அணியின் ஓட்ட எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 138 ஆக இருந்தது.

அதிகபட்சமாக சாமர கபுகெதர மற்றும் அணித்தலைவர் திலகரட்ன டில்ஷான் ஆகியோர் 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் களுவிதாரன 21 ஓட்டங்களையும், சசித்திர சேனநாயக்க 19 ஓட்டங்களையும், திலின துசாரா மற்றும் பர்வீஷ் மஹ்ரூப் ஆகியோர் தலா 10 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய ஜாம்பவான்கள் அணி சார்பில் பந்து வீச்சில், முனாப் படேல் 4 விக்கெட்டுக்களையும், சகீர் கான், இர்பான் பதான், மன்பிரீட் கோனி, சஞ்சய் பாங்கர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 139 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய ஜாம்பவான் அணிக்கு, இலங்கை ஜாம்பவான் அணியின் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் சிம்ம சொப்பனமாக விளங்கினார். அவர் பாணியிலேயே சச்சின் டெண்டுல்கருடைய விக்கெட்டை ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், யுவராஜ்சிங்கின் விக்கெட்டை ஒரு ஓட்டத்துடனும் கைப்பற்றினார்.

ஆனாலும், முஹமட் கைப் மற்றும் இர்பான் பதான் ஆகியோர் நிலைத்து நின்று ஆடி, இந்திய ஜாம்பவான்கள் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இதில், இர்பான் பதான் 31 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 6 பவுண்டரிகளுடன் 57 ஓட்டங்களையும், முஹமட் கைப் 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இறுதியில், இந்திய அணி 18.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

சகல துறைகளிலும் அசத்திய இர்பான் பதான் போட்டியின் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய வெற்றியுடன் இந்திய ஜாம்பவான்கள் அணி, இந்தத் தொடரில் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

# சிக்கலில் ஜப்பான்

ரோக்கியோவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டால், ஜப்பான் பொருளாதார சிக்கலை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜுலை மாதம் தொடங்க உள்ள ஒலிம்பிக் போட்டி ஜப்பான் நகரம் ரோக்கியோவில் நடைபெற உள்ளதாக இருந்தது. இந்நிலையில், கொரோனா அச்சுறுத்தல் உலகம் முழுவதும் மிரட்டி வருவதால், ஒலிம்பிக் போட்டிகள் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது வரை 4ஆயிரத்திற்கு அதிகமானோர் கொரோனாவால் பலியாகியுள்ள நிலையில், ஒலிம்பிக் போட்டிகள் பார்வையாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் நலன் கருதி நிறுத்தி வைப்பது குறித்து ஒலிம்பிக் கமிட்டி ஆலோசித்து வருகிறது.

ஒருவேளை நிறுத்தி வைக்கப்பட்டால், ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் போட்டி நடைபெறாது. இதற்கு முன்னதாக உலகப்போரின் போது ஒலிம்பிக் போட்டிகள் ரத்து செய்யப்பட்டன. ஒலிம்பிக் போட்டிகள் ரத்தானால், ஜப்பான் மிகப் பெரிய பொருளாதாரச் சரிவை சந்திக்கும் என்று கூறப்படுகிறது. 35ஆண்டுகளில் முதல் முறையாக பார்வையாளர் இல்லாமல் ஒலிம்பிக் ஜோதி நிகழ்ச்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# சுப்பர் ஓவரில் ஆப்கானை வீழ்த்தியது அயர்லாந்து

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது ரி – 20 போட்டியில், சுப்பர் ஓவரில் வெற்றி பெற்றதன் மூலம் தொடரில் ஆறுதல் வெற்றியை அயர்லாந்து பதிவு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தான் – அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி –20 போட்டி கிரேட்டர் நொய்டாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அந்த அணியின் ஓ’பிரைன் 26 ஓட்டங்களையும், டெலனி 37 ஓட்டங்களையும், டெக்டர் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 143 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர் ரஹ்மனுல்லா குர்பாஸ் 29 பந்தில் 42 ஓட்டங்களை அடித்தார்.

ஒரு கட்டத்தில் ஆப்கானிஸ்தான் 12.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 92 ஓட்டங்களை எடுத்திருந்தது. 47 பந்தில் 50 ஓட்டங்கள் மட்டுமே தேவையிருந்தது. கைவசம் 8 விக்கெட் இருந்ததால் ஆப்கானிஸ்தான் எளிதாக வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதன்பின் ஆப்கானிஸ்தான் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன. கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ரஷிட் கான் முதல் பந்தில் ஓர் ஓட்டத்தைப் பெற்றார். அடுத்த பந்தில் ஆப்கன் அஸ்கர் இரண்டு ஓட்டங்கள் அடித்தார். ஆனால் அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். கடைசி மூன்று பந்தில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

நான்காவது பந்தில் ‘வைட்’ மூலம் ஓர் ஓட்டம் கிடைத்தது. அதற்குப் பதிலாக வீசப்பட்ட பந்தை சிக்சருக்கு விளாசினார் ரஷிட் கான். இதனால் கடைசி இரண்டு பந்தில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஐந்தாவது பந்தில் மீண்டும் ‘வைட்’ மூலம் ஓர் ஓட்டம் கிடைத்தது. ஆனால் அதற்குப் பதிலாக வீசிய பந்தில் ஓட்டம் எதுவும் கிடைக்கவில்லை.

ஆகவே கடைசி பந்தில் சிக்ஸ் அடித்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டது. ரஷிட் கானால் அந்தப் பந்தில் நான்கு ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

இதனால் ஆப்கானிஸ்தான் அணியும் 20 ஓவர்களில் 142 ஓட்டங்கள் அடித்ததால் ‘சூப்பர் ஓவர்’ கடைபிடிக்கப்பட்டது.



இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தானால் 8 ஓட்டங்கள் மட்டுமே பெற முடிந்தது.

பின்னர் 9 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய அயர்லாந்து கடைசி பந்தில் சிக்ஸ் அடித்து வெற்றி பெற்றது.

ஏற்கனவே முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றதால் ஆப்கானிஸ்தான் தொடரை 2–1எனக் கைப்பற்றியது.

நேற்று முன் தினம் போட்டியின் நாயகனாக கெவின் ஓ’பிரைன் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக ஆப்கானிஸ்தானின் ரஹ்மனுல்லா குர்பாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# சரணடைந்த அனைவரும் விடுதலை என்கின்றார் மஹிந்தர் இதற்கு அவரது தமிழ் முகவர்கள் கூறும் பதில்தான் என்ன?

## ஐங்கரநேசன் கேள்வி



யாழ்ப்பாணம்,மார்ச்11

இறுதிப்போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த அனைவருக்கும் புனர்வாழ்வு வழங்கி அவர்களை விடுவித்து விட்டோம், நாம் எவரையும் காணாமல் ஆக்கவில்லை, எவரையும் சுட்டுக் கொல்லவும் இல்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்திருக்கிறார். படை யினரிடம் தங்கள் உறவுகளை ஒப்படைத்த அவர்களது சொந்தங்கள் கண்ணீரும் கம்பலையுமாக அவர்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கும்போது அவர்களைப் பொய்யர்கள் என்று கூறுவதுபோல அனைவரையும் விடுவித்துவிட்டோம் என்று பிரதமர் அப்பட்டமாகப் பொய்யுரைத்துள்ளார். இதற்கு அவரின் முகவர்களாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த அனைவரையும் விடுவித்துவிட்டோம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறினார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கும் நிலையில் இது தொடர்பாக ஊடகங்களுக்கு பொ.ஐங்கரநேசன் அனுப்பிவைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் –

யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியக்கோரி அவர்களது சொந்தங்கள் பல வருடங்களாகத் தொடர்போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும்போது, அவர்களை ஏளனம் செய்வது போலப் பிரதமரின் கூற்று அமைந்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பேரினவாதத்தை மூலதனமாகக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமலே வெற்றியைப் பெற்ற ராஜபக்ஷ சகோதரர்கள் தற்போது தமிழ் மக்களின் எந்த ஒரு கோரிக்கையையேனும் கண்டுகொள்ளாமல் இலங்கையை பௌத்த, சிங்கள நாடாகக் கட்டியமைப்பதில் முனைப்புக் காட்டிவருகின்றனர். இன்னொருபுறம, அவர்களது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும், அவர்களோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகளும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வாக்குக்கேட்டு வலம்வரத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின் போது தென்இலங்கையின் அரசியல் கள நிலைமைகளை அறியாது எமது தமிழ்த் தலைமைகள் எடுத்த நிலைப்பாட்டால் தமிழ்மக்களின் ஜனநாயக ரீதியாகப் பேரம்பேசும் சக்தியும் இல்லாமற் போனது. ஜனாதிபதித் தேர்தலில் தென்இலங்கையைச் சிங்கள மக்கள் தங்களை ஒரு தனியான தேசமாகச் சிந்தித்து முடிவெடுத்தது போன்று தமிழ்மக்களும் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியோ, பகிஷ்கரித்தோ தங்களைத் தனியான ஒரு தேசமாக நிரூபித்திருக்க முடியும்.எமது தலைவர்களால் தவறவிடப்பட்ட அந்த வாய்ப்பை எமது மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் சரிவரப் பயன்படுத்த வேண்டும்.

சரணடைந்தவர்கள் எல்லோரையும் விடுதலை செய்துவிட்டோம், காணாமற் போனவர்கள் என்று இங்கு எவரும் இல்லை என்று அரசாங்கம் அறிவித்த பின்பும், அதைப்பற்றி எதுவுமே பேசாமல் வாக்குக் கேட்டுவரும் தென்னிலங்கைக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் பேரினவாதக் கட்சிகளுக்கு முண்டுகொடுக்கும் தமிழ்க. கட்சிகளுக்கும் வாக்குகள் எதனையும் வழங்காது வடக்குக் கிழக்கில் தமிழ்மக்கள் நாங்கள் தனியான ஒரு தேசம் என்பதை முரசறைவோம். – என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# இரண்டாக உடைகிறது ஐ.தே.க.!

## உட்கட்சி மோதல் உச்சம்



கொழும்பு, மார்ச் 12

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் மோதல் வலுத்துள்ள நிலையில் ரணில் மற்றும் சஜித் அணிகளை ஒன்றிணைத்து பொதுத்தேர்தலை ஓரணியாக எதிர்கொள்வதற்கு முன்னெடுக்கப்பட்ட கடைசி முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இதனால் இரு அணிகளுமே தனிவழிப் பயணத்தை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் தமது கட்சி யானை சின்னத்தின்கீழ் 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம்,தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியும் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் என்ற அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சஜித் அணி அறிவித்தது. இந்நிலையில் இரு அணிகளையும் இணைக்கும் கடைசிகட்ட முயற்சியில் கருஜயசூரியவும், ராஜித சேனாரத்னவும் ஈடுபட்டனர்.

இதற்காக முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவின் வீட்டில் கடந்த திங்கள் இரவு விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரு அணிகளில் இருந்தும் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

எனினும் யாப்பு உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதனால் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனை நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இரு அணிகளுமே உறுதிப்படுத்தின. அத்துடன், சரமாரியாக சொற்கணைகளையும் தொடுத்துக்கொண்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சுஜீவ சேனசிங்க,

ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் கருஜயசூரிய தலைமையில் திங்கள் இரவு சந்திப்பு நடைபெற்றது. யாப்பு உட்பட சட்டரீதியான ஏற்பாடுகளை சுட்டிக்காட்டி யானைச் சின்னத்தில் போட்டியிடுவதையே ரணில் தரப்பு விரும்புகிறது. இறுதியில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் எமது முடிவு அறிவிக்கப்பட்டது.

மத்தியஸ்தராகவே கரு ஜயசூரிய பங்கேற்றார். பிரச்சினைகளை இரு அணிகளுமே தீர்ந்துக்கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

குறிப்பாக எமது கட்சியிலும் நான்கு, ஐந்து கருப்பு புள்ளிகள் உள்ளன. அந்த புள்ளிகள் வேண்டுமானால் அகில விராஜுடன் இணைந்து யானை சின்னத்தில் போட்டியிடட்டும். கருப்பு புள்ளிகளை வெளியேற்றுவதற்கு எமக்கு கிடைத்துள்ள வாய்ப்பு இதுவாகும். – என்றார்.

அதேவேளை, சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரணில் ஆதரவு அணி உறுப்பினரான பாலித ரங்கே பண்டார –

ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பின் சில சரத்துகளிலுள்ள பயங்கர நிலைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை சமர்ப்பிக்குமாறு கருஜயசூரிய இதன்போது கோரியுள்ளார். எனினும், சஜித் தரப்பு அவற்றை வழங்கவில்லை. இதுவே உண்மை.

எனவே, இது தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கின்றேன். அப்போது பொய்யுரைப்பது யார், மெய் பேசுவது யாரென்பது தெரியவரும். – என்றார்.

அத்துடன், யானையில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத சிலரே சஜித்தின் முதுகில்ஏறி சவாரி செய்வதற்கு முயற்சிக்கின்றனர். சஜித்தை தவறாகவும் வழிநடத்துகின்றனர். எனவே, கட்சியை அழிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன். – என்று தயாகமகே இதன்போது கூறினார். (ஐ)

# பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியை பார்வையிடப் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம்

கொழும்பு,மார்ச் 12

பழைய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியான தற்போதைய ஜனாதிபதி அலுவலகத்தை மார்ச் 14ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு வார இறுதி நாள்களிலும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பொதுமக்களுக்கு பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். பார்வையிட வருபவர்களுக்கு ஒளிப்படம் எடுக்கவும் முடியும்.

– இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அனுப்பிவைக்கப்பட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) எனும் பெயருக்கு வேண்டுகோள் கடிதமொன்றை 011 -2441685 என்ற பக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பிவைப்பதன் ஊடாக அல்லது 011 - 2354354 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிடுவதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளலாம்.

பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியானது இலங்கை அரசியல் வரலாற்றில் தீர்மானமிக்க யுகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பழைய கட்டட நிர்மாண முறைமைகளில் ஐந்தில் ஒன்றான அயானியானு முறைமைக்கு ஏற்ப 82 ஆண்டுகளுக்கு முன் இது நிர்மாணிக்கப்பட்டது.

இதன் முன் தோற்றம் எதென்சில் உள்ள எக்ரோபொலிஷ் மலையில் எதினா என்ற கிரேக்க தேவதைக்காக உருவாக்கப்பட்டுள்ள பிரதான தேவாலயமான பாதினன் கட்டடத் தொகுதிக்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

ஹேபட் ஸ்டென்லி ஆளுநர் மூலம் 1930 ஜனவரி மாதம் 29ஆம் திகதி அரசமைப்பு சபையாக இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. அரசமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் சட்டத்துறையில் பின்னர் இடம்பெற்ற பெயர் மாற்றத்துடன் இது அரச மந்திரிகள் சபை (1931 - 1947) உப மந்திரி சபை (1947 - 1972) தேசிய அரச சபை (1972 - 1978) மற்றும் இலங்கை நாடாளுமன்றம் (1978 - 1982) என்ற பெயர்களின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் இப்புராதன கட்டடம் 1983 செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகமாக பெயரிடப்பட்டது – என்றுள்ளது.

(ஐ)

# இலங்கையில் ஆட்டத்தை ஆரம்பித்தது கொரோனா!

## சுற்றுலா வழிகாட்டிக்கு தொற்று

கொழும்பு, மார்ச் 12

இலங்கையர் ஒருவர் உள்நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளானமை முதல் தடவையாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டியாகச் செயற்படும் அந்த நபர் தற்போது அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இந்த நபர் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2020 இல் வெளியிடப்பெற்றது.